


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T

வகுப்பெண் 894.811.17 ஈட்டலெண் 692619

# இலங்கைப் பல்கலைக்கழக நூலகம்

பேராதனை.

## இரவல் பெறுவோருக்கு அறிவித்தல்

இந்நூல் பல்கலைக்கழக நூலகத்தினது உடைமை. நூலக இரவல் விதிகளுக்குப் புறம்பாக, இதனை இசைவாணையின்றி வைத்திருத்தல் பாரதூரமான குற்றமாகும். நூலகக் கையேட்டிலுள்ள இரவல் பெறுவதற்கான நியதிகளையும், சட்டங்களையும் செவ்வனே பின்பற்றுமாறு இரவல் பெறுவோர் கேட்கப்படுகின்றனர்.

...பிரவாகவும் ஒற்றைகளை மடிக்காம... வரையாமலும், மற்றும் முறைகளில் குறிலீடுகள் செய்யாமலும் வைத்துக்கொள்ளுமாறு தயவாகக்கேட்கிறோம். திருப்பித் தரும் நூல்களின் நிலைமைக்கு வாசகர்களே பொறுப்பு. ஆதலினால், இரவல் பெறமுன்னர். நூலில் உள்ள ஊறுகளை அவர்கள் முகப்பு மேசையிலுள்ள நூலகத் துணைவர்களுக்குச் சுட்டிக் காட்டி விட வேண்டும்.

T
894.811.17
...619

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கீர்த்தனம் கவிதைகள்

692619

சோ.ஷண்முகப்பிரியா

692619

தமிழ்ச் சங்கம்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
பல்கலைக்கழகப் பூங்கா
ஒலுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கீர்த்தனம்


கவிதைத் தொகுப்பு (01)

| | |
|---|---|
| ஆசிரியர் | : சோமசுந்தரம் ஷண்முகப்பிரியா |
| முதற்பதிப்பு | : நவம்பர். 2015 |
| வெளியீடு | : தமிழ்ச் சங்கம் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் |
| கணினி எழுத்து | : சோ. ஷண்முகப்பிரியா |
| வடிவமைப்பு | : எஸ். நிரோஷன் (பண்டாரவளை) |
| மின்னஞ்சல் | : *s.priya833@gmail.com* |
| தொலைபேசி | : 077-0520334 |
| விலை | : 250.00 |

***SHANKEERTHANAM***

| | |
|---|---|
| ***Author*** | ***: Somasundharam Shanmugapriya*** |
| ***First Edition*** | ***: November.2015*** |
| ***Published by*** | ***: Tamil Sangam South Eastern University,*** |
| ***Typing*** | ***: S. Shanmugapriya*** |
| ***Cover design*** | ***: S. Niroshan (Bandarawela)*** |
| ***Email*** | ***: s.priya833@gmail.com*** |
| ***T.Phone*** | ***: 077-0520334*** |
| ***Price*** | ***: 250.00*** |
| ***Printing*** | ***: dot printers Main Street, Sainthamaruthu.*** |
| ***ISBN*** | ***: 978-955-42795-0-6*** |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

உயிரளித்து

உலகை காண வைத்து

உலகை அறிய செய்து

உன்னதக் கல்வியளித்து

உணர்வோடு வாழ வைத்திடும் - என்

உயர் தெய்வங்களான

அன்பின் தாய் இந்ராணி அவர்களுக்கும்

அன்பின் தந்தை சோமசுந்தரம்

அவர்களுக்கும்

692619



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

பள்ளிப் பருவத்தைப்
பக்குவப்படுத்தி – தமிழுக்காக
பலரது பாராட்டும்
பரிசில்களும் பெற்று – தமிழ்த்துறையில்
பட்டத்துடன் – தமிழுக்கு
இனிமை சேர்த்த ஷண்முகப்பிரியாவுக்கு
ஆசான் வழங்கும் ஆசியுரை

மேலும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு தன்னால் முடிந்த பங்களிப்பை வழங்க நவீனயுகத்தில் தன்னை அர்ப்பணித்து "சங்கீர்த்தனம்" எனும் கன்னிக் கவிதை மாலை வடிவமைத்து வாசகர்களுக்கு வழங்கி வைக்கும் எனது மாணவியான சோ.ஷண்முகப்பிரியாவின் முயற்சி பாராட்டத்தக்கதாகும்.

இவர் பள்ளிக் காலத்திலே சக மாணவர்களோடு தமிழ்மொழியில் போட்டிபோட்டு முன்னுக்கு வருவதில் என்றுமே சளைக்காத ஒரு மாணவி. அதன் வளர்ச்சிப்படி இந்நூலாகும். தமிழ்மொழிப் போட்டிகளில் பங்கேற்கத் தவறாத இவர், தனது தமிழாற்றலை விரிவுபடுத்தி பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறையில் பட்டம் பெற்று தமிழுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் ஷண்முகபிரியாவின் இலக்கிய ஆசை ஓர் வற்றாத நதியாக ஓடிக்கொண்டிருக்க வேண்டுமென்றும், இன்னும் கவிதை, கட்டுரை, சிறுகதை என பல்வேறுபட்ட நூல்களை இயற்றி இலக்கிய உலகிற்கு தன்னை அர்ப்பணித்து தமிழுக்காக, தமிழ் மொழிக்காக பாடுபட என் நல்லாசிகள் என்றும் உமக்கே சொந்தமாகட்டும். இவருடைய ஆர்வம் மற்றையோருக்குச் சிறந்த முன்மாதிரியாகும். பாராட்டுக்களுடன் கலந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

"வாழ்க தமிழார்வம், வளர்க தமிழ்ப் பணி"

எஸ். ஹாசீம்,
அதிபர்,
ப/குருத்தலாவை முஸ்லிம் மத்திய கல்லூரி
(தேசிய பாடசாலை),
குருத்தலாவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தலை நிமிர்ந்தவர்களுள் சண்முகப்பிரியாவும் ஒருவர். மிகசாதாரணமான நடை, உடை, பாவனைகளோடு பல்கலைக்கழகத்திற்குள் புகுந்த இவர் காத்திரமிக்க ஆளுமையுள்ள- தலைமைத்துவப் பண்புகள் நிறைந்த ஒருவராக மிளிர்ந்தார் என்பது மிகுந்த மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்திலே பெரும்பான்மையாக முஸ்லிம் மாணவிகள் இருக்கின்ற இடத்தில் எல்லோரோடும் சகவாசத்தோடும் அன்போடும் பண்போடும் பழகி தனது இருப்பை நிலைநிறுத்தியவர் சண்முகப்பிரியா. தமிழ் விசேடதுறை பட்டதாரியாக வெளியேறிய அவர் எங்களது மாணவர்களுள் மறக்க முடியாதவர். அவரிடமிருந்த பணிவான குணம் நமக்கு வியப்பைத் தந்திருக்கிறது. ஒரு நல்ல பண்பான மாணவிக்குக் கல்வியூட்டிய மகிழ்ச்சி எங்களுக்கு இருக்கிறது.

அவர் தமிழ்ச் சங்கத்தின் தலைவியாக இருந்து பல்வேறு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்திருந்தார். குறிப்பாக அவர் காலத்தில் இடம்பெற்ற சித்திரப் போட்டி நிகழ்ச்சி மாணவர் மத்தியில் அதிகம் வரவேற்பைப் பெற்றிருந்தது. இதுபோன்ற பலபோட்டி நிகழ்ச்சிகளை அவர் ஒழுங்குபடுத்தி மாணவர்களை ஊக்குவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் இன்று வெளியிடுகின்ற இந்தக் கவிதைத் தொகுதியில் உள்ள கவிதைகள் சில பல்கலைக்கழகத்தின் மரங்கொத்தி, அதிர்வு, கவிப்பலகை, கவியரங்கம் முதலானவற்றில் வெளிவந்த கவிதைகளே.

எல்லோரும் போல தந்தையை, தாயை, ஆசிரியரைப் பாடிய இவரிடம் ஓர் எதிர்ப்புக்குணம் குடிகொண்டிருக்கிறது. அநியாயத்தையும் அட்டகாசத்தையும் அவர் தமது கவிதைவரிகளில் சுட்டுப்பொசுக்க முனைந்துள்ளார். தமிழர்களின் கலாசாரம் இன்று தொலைக்காட்சிக்காகப் பறிபோனதை அவர் கேள்வியெழுப்புகிறார்.

மழை உடலை நனைக்க
வெயில் உடல் நீரை உறிஞ்சியெடுக்க
அட்டைகள் உதிரத்தை உணவாக்க
இரவுபகல் பாராது உழைக்கின்றான்
தன் கனவில்லத்திற்காய்

என்று

பாடுபட்ட எத்தனையோ தொழிலாளர்கள் முதியோர் இல்லத்தில் நிம்மதியற்று வாழ்வதைக் கேள்வியெழுப்புகிறார். கற்புக்குப் பாத்திரமான கண்ணகியின் குரலாக அவர் இங்கு கவி வாசித்திருக்கிறார். இவையெல்லாம் சண்முகப்பிரியாவினை இப்பல்கலைக்கழகத்தில் தனித்துவமாகவே காட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்தின் நினைவுகளும் கனவுகளுமாய் உருப்பெற்ற பல கவிதைகளும் இத்தொகுதியில் உள்ளன. இப்பிரதேசத்தை மூழ்கடித்த சுனாமியும் மாயமாகிப் போன மலேசியவிமானமும் அவர் உள்ளத்தில் வேதனைகளைக் கிளப்பி இருக்கின்றன. இவையெல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கிறபோது சண்முகப்பிரியாவிடம் ஒரு இலக்கியமனம் குடிகொண்டிருந்தது கவனிக்கத்தக்கது.

உலக இஸ்லாமிய தமிழிலக்கிய மாநாட்டுக்காக அவர்

அறம் அன்பு
எளிமை ஒழுக்கம்
ஞானம் பொறுமை
நம்பிகை உண்மையென
கிருபையெல்லாம் ஒன்றுசேர
உருவான திருவடிவமே
கீர்த்திசேர் வள்ளல்

என முஹம்மதைப் பாடியதைக் கேட்க அவரது சமரச உள்ளம் நமக்குத் தெளிவாகியது.

ஒட்டுமொத்தமாகத் தனது கவி ஆற்றலைப் பதிவு செய்திருக்கிற பிரியாவுக்கு இன்னும் நிறைய வாசிப்புக்கு இடமிருக்கிறது. நல்ல வாசிப்பு நல்ல கவிதைகளைக் கொண்டுவரும். “உயர்ந்த கவிதைகளை எழுதுவதற்கு நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைரமுத்தல்லவே" என்று குறிப்பிடும் சண்முகப்பிரியாவின் அவையடக்கம் நமக்கு அதிகம் கதை சொல்லியிருக்கிறது. சண்முகப்பிரியா இன்னும் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய கவிஞர். அவருக்கு நல்ல எதிர்காலம் உண்டு. அதனை வெற்றிகொள்ள அவர் முனையவேண்டும்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றில் சண்முகப்பிரியா மறக்கப்படமுடியாத மாணவி. அவரது பதிவுகள் அதற்குச் சாட்சியாக அமைந்திருக்கின்றன. கவிதை உலகிலும் அவர் அதிகம் சாதிப்பதற்கு இறைவன் துணைபுரிய வேண்டும். அவருக்கு நமது பிரார்த்தனைகளும் வாழ்த்துக்களும் என்றும் உண்டு.

கலாநிதி எம்.ஏ.எம். றமீஸ் அப்துல்லா,
தலைவர், மொழித்துறை,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்து மொழியாய் சில வரிகள்

பிறப்பெடுக்கும் அனைவரும் சாதனை படைப்பதில்லை, இறந்தும் வாழத்துடிக்கும் ஒவ்வொருவரும் பிறப்பின் நோக்கத்தைக் கண்டுக்கொள்கின்றனர். தமிழனாய் பிறந்த ஒவ்வொருவரும் படைப்பாளியாய் இருக்க வேண்டும் அல்லது வாசகனாய் இருக்க வேண்டும் என என் ஆசான் அடிக்கடி உரைப்பார். இன்றுவரை வாசகனாய் திகழ்ந்த நான் படைப்பாளியாய் மாறவும் துடித்தேன்.

பத்திரிகைகளில், இணையத்தளங்களில், சஞ்சிகைகளில் சுற்றித்திரிந்த என் கவிதைகளுக்கு ஓர் இருப்பிடத்தை நாடினேன். இது என் தீரா தாகமாகும். எனது கன்னி முயற்சியாய் "சங்கீர்த்தனம்" கவிதைத் தொகுப்பு இலக்கிய உலகில் பிறப்பெடுப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ச்சங்க தலைவியாய் இருந்த காலகட்டத்தில் கவிதைத் தொகுப்பொன்றை வெளியிட வேண்டுமென்ற எண்ணம் உதயமாகியது. எனினும் பல்வேறு தடைகள் என்னை தாக்கியதால் அவ்வெண்ணம் முற்றுற்று மீண்டும் தொடர்கதையாய் தொடர்ந்து இன்று "சங்கீர்த்தனையாய்" வெளிவருகின்றது.

என் மனச்சிதறல்களை மற்றவர்களுடன் பகிர்வதில் ஆர்வமின்மையால் அச்சிதறல்களை கவிவரியாய் வடிப்பதில் கோடி இன்பமெனக்கு. இதன் உச்சக்கட்டமாய் "சங்கீர்த்தனம்" உலாவரப் போகிறது. என் கவிதைகளை வாசித்துவிட்டு இவை கவிதைகளா? என்று வினவலாம், விவாதிக்கலாம் ஆனாலும் நான் வைரமுத்தல்வே. என் உள்ளத்து இரசனைகளை, குமுறல்களை, வேதனைகளை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவங்களை நிகழ்வுகளை, காயங்களை, நினைவுகளை கவித்துளிகளாய் தெளித்துள்ளேன். உங்கள் விமர்சனங்களையும் துணிவுடன் ஏற்கக் காத்திருக்கின்றேன்.

இக்கவிதைத் தொகுப்பை வெளியிடுவதற்கு அறிந்தும் அறியாமலும் துணைநின்றவர்களுக்கும் எனக்கு தடைகள் விதிக்காது என்றும் கைகொடுக்கும் பாசமிகு தந்தை திரு.சோமசுந்தரம் அவர்களுக்கும் மனம் தாழ்ந்திடும் பொழுதனைத்தும் தைரியமூட்டி முன்னேறச் செய்திடும் அன்புமிகு அன்னை திருமதி.இந்ராணி அவர்களுக்கும்

தவறிழைக்கும் தருணமும் நற்செயல்களில் முன்நிற்கும் போதும் மாறா மனதுடன் நல்மொழிகள் மொழிந்து நூலொன்றை வெளியிட வேண்டுமென்ற எண்ணத்தை தோற்றுவித்து இன்றும் எல்லாவிதத்திலும் துணைநிற்கும் தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.ஏ.எம்.றமீஸ் அப்துல்ஹா அவர்களுக்கும் தமிழ்மொழியின் ஆர்வத்தை தோற்றுவித்த என் தமிழ்மொழிப் பாட ஆசிரியர் மதிப்பிற்குரிய திரு.ஹாசீம் ஆசிரியர் அவர்களுக்கும் (ப/ குருத்தலாவை முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை), அதிபர்)

என் கல்விப் பயணத்தில் துணைநின்ற ப/ வெலிமடை தமிழ் மகா வித்தியாலயம், ப/ பாதினாவெல முஸ்லிம் மகா வித்தியாலயம், நு/ நள்ளிலைப் பாற்றிய மகளிர் பாடசாலை,நுவரெலியா M.T.S கல்வியக ஆசிரியர்களுக்கும், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை விரிவுரையாளர்கள் அனைவருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பலவிதங்களிலும் எனக்கு துணை நிற்கும் சகோதரி சிவபிரியதர்ஷினிக்கும் சின்னன்னை திருமதி. தி.உதயராணி (ஆசிரியை) அவர்களுக்கும் நண்பர்களான காளிதாசன் (பண்டாரவளை), சப்ரீன் (மருதமுனை) கணினி வடிவமைப்பில் துணைநின்ற எஸ்.நிரோசன் மற்றும் இம்முயற்சியில் துணைநின்ற குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் எனது இதம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என் இலக்கிய உலக பிரவேசம் வெற்றிகரமாய் அமைய உங்கள் ஆதரவும் ஆசிர்வாதமும் என்றென்றும் இருக்க உங்கள் மனங்களைத் திறந்திடுங்கள்.

சோ.ஷண்முகப்பிரியா (ஆசிரியை)
ப/ஸ்ரீ கணபதி தமிழ் மகா வித்தியாலயம்
ரேந்தபொல
2015.11.27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பக்கப்பதிவுகள்


01. அன்னைக்காய் அன்பு வரிகள்
02. அமுத மொழிகள் தந்தைக்காய்
03. அறிவுச்சுடருக்காய் சில வரிகள்..
04. ஆழ்நெஞ்சை சிதைத்த சுனாமி
05. இதய வேதனை
06. இயற்கையும் செயற்கையும்
07. உழைப்பு
08. எங்கே ?
09. என்னவளே
10. என்னவுலகமிது
11. ஓர் துளி
12. கண்ணோரத்தே கண்ணீர் துளிகள்
13. கணத்தில் கலைந்திட்ட இன்பங்கள்
14. கண்ணகி
15. கலாசாரம்
16. திக்கொரு திசையில் பறக்கும் பட்சிகள்
17. திசையறியா இதயங்கள்
18. தொலைத்தாய் என்வாழ்வை
19. நாமம் அகதிகளா?
20. நீயும் நட்டிடு முற்றமதில்
21. பணம்
22. பள்ளிக்கூடம்
23. பரிதாபம்
24. பிச்சைக்காரன்
25. பிரிவின் தவிப்பு
26. பொறுமை
27. மலை
28. மலையக மகுடம்
29. மழை
30. மறந்திடேன்
31. மாயமான மலேசிய விமானம்
32. மாறா நினைவலைகள்
33. மீண்டும் பாதையறியாது
34. மீண்டும் வாழவிடு
35. விரைந்திடும் நேரமுள்
36. விளையாட்டு பொருளாய் விதி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னைக்காய் அன்பு வரிகள்

உயிர்பிச்சையளித்து
உள்ளத்துள் குடியிருக்கும்
உன்னத கடவுள்

அன்னையே
உன் புகழ்போற்ற- என்னகராதியில்
வார்த்தைகளே இல்லை
உலகை காணவைத்த
நீயே
இவ்வுலகின் முதல்
மாமனிதன்

என் கண்கள் என்றும்
உன்னைக் காணவே
என் வாய் என்றும்
உன் புகழ் பாடவே
என் கைகள் என்றும்
உன் சேவைகளுக்காகவே
என் கால்கள் என்றும்
உனக்காக நடைபோடவே
என் காதுகள் என்றும்
உன் கனிமொழி கேட்கவே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் இதயம் என்றும்
உன் குடியிருப்பிற்காகவே
மொத்தத்தில் உனக்காகவே
என் உடல் வாழ்கின்றது

அன்னையின்றி நானில்லை
தாயே இறையிடம்
யாசிக்கும் வரம்- நான்
இவ்வுலகில்
பிறப்பெடுக்கும் ஒவ்வொரு
முறையும் நீயே என் தாய்
நானே உன் பிள்ளை







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுத மொழிகள் தந்தைக்காய்

தாலாட்டி
பாராட்டி
பாசமூட்டி
தைரியமூட்டி
இப்பூவுலகை
கையளித்த தெய்வமவர்
உன் மணித்துளிகளை
தியாகித்து
இரவுபகல் பாராது
உழைத்திட்டு எம்
வசந்த
வாழ்விற்கு நல்வித்திட்டு
விளக்கேற்றி
ஒளிரச்செய்தோனே
என் ஜீவனது துடிக்கும்வரை
உனக்காக வாழ்ந்து மடிவேன்
என் இன்பங்கள்
செல்வங்கள்
புகழாரங்கள்
புண்ணியங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் அனைத்தும்
உனக்கே சமர்ப்பணம்
என் புகழ்மாலைகள்
அனைத்தும்
என்றுமே உனது
கழுத்துக்கே
சொந்தமானவை







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுச்சுடருக்காய் சில வரிகள்.....

குற்றங்கள் இதுவென அறியா
குறும்புகள் இதுவென அறியா
தமிழ் அரிச்சுவடிகள் அறியா
தன்னைப் பற்றி அறியா
அழகிய பருவம் முதல்
அறிவு வழங்கி
பல்கலைக்கழகம் சென்று
பட்டங்கள் பெற்றிட
வழிக்காட்டியாய்
வாழ்ந்திடும் உன்னை
என்னச் சொல்லி புகழ்ந்திடுவேன்.

நிலவின் ஒளியாய்
மலரின் வாசனையாய்
கடலின் முத்தாய்
என்றும் நீ புகழுடனே
வாழ்வாய்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனீயின்றி தேன் இல்லை
பசுவின்றி பசும் பாலில்லை
தாயின்றி சேயில்லை
கடலின்றி கடலலையில்லை
நீயின்றி உலக உயர்வுமில்லை

துன்பங்கள் தொலைந்து
கவலைகள் கரைந்து
சிக்கல்கள் சிதைந்து
உன்சேவைகள் தொடர
மனமுவந்து வாழ்த்துகிறேன்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழ்நெஞ்சை சிதைத்த சுனாமி

அன்னையாய் ஆதரித்த
உன்னை
அன்னியனாய் எண்ணிடச் செய்தாய்
சிறு பொழுதினில்

அலை அலையாய் பாய்ந்துவந்து
எம் இதயத்தை
அள்ளிச் சென்றாய்
உன் காதலியாய்

ஆயிரம் முத்தமிட்டவனாய்
எம் பாசத்தீயில் எரிந்து
ஆழ்துயரத்தில் ஆழ்த்திவிட்டாய்
சுனாமி எனும்
ஆறாத தீக்காயத்தில்

பல வருடங்கள் கடந்தும்
உன் கொடூரச் செயலை
ஆழ்மனதிலிருந்து அகற்ற முடியவில்லை
அச்சப்படுத்தி
எம் உறவுகளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளிச் சென்ற
உன் கொடூர
ஆவேசத்துடன் மீண்டும் மீண்டிடாதே

அன்பு கொண்ட
எம்மை
அழித்திடத் துணிந்ததை
ஆழ்நெஞ்சிலிருந்து
அகலாமல் ஆட்சிகொள்வது போதும்
மீண்டிட்டு
அணு அணுவாய்
அழித்திட முயற்சிக்காதே







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய வேதனை

இன்பப் பொழுதுகளை தொலைத்து

இடைவிடா முயற்சிகளுடன்

இதம் கனிந்த முடிவுகளுடன்

இன்பமயமாய் பல்கலைக்கழகம் நுழைய

இதுவே எம் ராஜ்ஜியமென

இம்சைபடுத்தினர் சீனியஸ்

இருந்தும் கழகம் விட்டு தப்பிக்க இயலவில்லை

இரண்டுடன் இரண்டாய் காலங்கள் கடந்தும்

இதயத்தில் சுமையில்லை

இறுதி உரை கூறி கழகம் எனும்

இமயத்தை விட்டு பட்டதாரிகளாய் வந்தோம்

இரு வாரங்கள்

இரு மாதங்கள்

இரு வருடங்கள் என கடிகார முள் விரைந்தும்

இன்றும் வீ.ஜ.பி எனும் பட்டம் மட்டுமே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு பகலாய் மனநிம்மதியற்று

இரவு தூக்கத்தை துறந்து

இல்லத்தாருக்கும் சுற்றத்தாருக்கும் பதில் கூற இயலாது

இதயத்தை கல்லாக்கி

இறைவனை தினம் தினம் வேண்டியும்

இன்றுவரை வீ.ஐ.பி யாய் சிலர்

இன்று நாளை என எதிர்பார்த்தும்

இதயத்துடன் மட்டுமே

இதயம் தாங்கா கண்ணீர் கதைகள்

இன்னும் சில நாட்கள் காத்திருப்போம்

இன்பமயமான நமது நாளுக்காக........






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையும் செயற்கையும்

அசைவில்லாது
சுவாசக் காற்றும்
அசைவுடனான
கடல் அலையும்
ஓசையில்லாத
பனித் துளியும்
ஓசையுடனான
நீர்வீழ்ச்சியும்
இயற்கையின்
இன்பப் பரிசுகள்



அசைவில்லாதுழைக்க
இயந்திரங்களும்
அசைவுடனான
சக்கரங்களால் விபத்துகளும்
ஓசையில்லாது படிக்க
கணினிகளும்
ஓசையுடனான குண்டுகளால்
அழிவுகளும்
செயற்கையின் துன்ப விளைவுகள்.

(தினகரன் 2010.11.28)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பு

பிறந்திட்டோம்
பிழைத்திட்டோம்
பிரிந்திட்டோம் என்பதல்ல வாழ்வு

சமூகம் போற்றிட
சாதித்து
சந்ததியினரும் தலைநிமிர்ந்திட
உழைத்து
உயர்ந்திடு பாரினிலே

பசித்திருந்து
தனித்திருந்து
விழித்திருந்து
விதியை வென்றிட
இதுவொரு வாய்ப்புனக்கு

உடல் தேர்ச்சியுடன்
உழைத்திடு
உடல் சோர்விழக்கும் வரைதனில்

மனச்சாந்தத்துடன்
வாழ்ந்திடலாம் மானிடா நீ
வாழும் வரை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே ?

வண்ணக் கோலமிட்டு
சூரிய உதயத்திற்கு முன்
பொங்கல் பொங்கி
குடும்பத்தோர்
கூட்டு பிரார்த்தனை செய்து
பெற்றோர் பெரியோர்
ஆசீர்வாதங்களைப் பெற்று
கோயில் பூஜையிலும்– ஓர்
பக்தனாய் வழிபட்டு
அயலவர்களுக்கு
பொங்கிய பொங்கலை
பகிர்ந்து மகிழும்
பொங்கல் விழா
எங்கே?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொ(ல்)லைக்காட்சிக்கு

முன்னால்

அமர்ந்த இடம் மாறாது

மூன்று மணித்தியாலய

திரைப்படங்களை

பார்ப்பதா?

பொங்கல் விழா

அன்றைய கலாசாரம்

எங்கே!

தொ(ல்)லைக்காட்சிக்குள்

தொலைந்து விட்டதா!.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னவளே

இமைகள்

இணையும்

இதமான நிமிடங்களிலும்

இதயம் தடவிச் செல்கிறாயே

தலையணை

தலையை அணைக்கும்

தருணத்தில்

தன்னவளே தாலாட்டுகின்றாய் கனவிலும்

உணவுதனை

உடலில் ஏற்றும்

உன்னத பொழுதினிலும்

உன் நினைவுகள் ஊஞ்சலாடுகின்றன

மனதில் உனக்கான கோயில்

மணியடிக்கிறது

மனதை அலைபாயவிட்டவனாய்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னவுலகமிது

மழை உடலை நனைக்க
வெயில் உடல்நீரை உறிஞ்சியெடுக்க
அட்டைகள் உதிரத்தை உணவாக்க
இரவுபகல் பாராது உழைக்கிறான்
தன் கனவில்லத்திற்காய்

சோதனைகள்
வேதனைகள் ஒளிவட்டமிட
துாக்கத்தை துறந்து
இன்பத்தை இழந்து
கட்டியெழுப்புகின்றான் - ஓர்
அழகிய மனைதனை

காலங்கள் உருண்டோட
உழைக்க உடலிசையவில்லை
முதிர்ந்து விட்டது
இவனில் இனி பயனில்லை
இனியில்லை
இவனுக்கு இடம் என
அனுப்பி விட்டான்
முதியோர் இல்லத்திற்கு
தன்னின்றோனை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுபட்டவனுக்கு
பயனில்லை இல்லமதில்
நிம்மதியற்று வாடுகின்றான்
தினம் தினம்
இறைவா!
இதுவென்ன உலகமிது!







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் துளி

ஓர் துளி..........

ஓராயிரம் துளிகள்............

ஓவென பொழிகின்றது மழை

தாவரங்கள் மெய்சிலிர்த்து

தாகம் தீர்த்துக் கொள்கின்றன

தாமரைகள் இதழ் மடித்து

தாய் வணக்கம் சொல்கின்றன

மழைமகளைக் காணா

மனித குலம்

மழைத் துளியைத் கண்ட கணம்

மனம் மகிழ்கின்றனர்

இதயங்கள்

இதமாயிருக்க

இருள் சூழ்ந்து

இழயிடிக்கின்றன





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலமில்லா கூரைகள்

பதம் பார்க்கப்படுகின்றன

பரம ஏழைகளின்

பரவசமெல்லாம் ஓடி ஒழிகின்றன

குண்டு மணியாய் வந்த துளி

குட்டைகளை நிரப்பி

குளங்களை வந்தடைந்து

குடும்பங்களை அழிக்கின்றது

ஆசையில் நட்ட மரங்கள்

ஆனந்த இல்லங்கள் எல்லாம்

ஆடி அசைந்து

ஆறாத துன்பக்கடலில் மிதக்கின்றன

உயிரினங்கள்

உருகுலைந்தோட

உலகமே திரும்பிடச் செய்கின்றது

உயிரில்லா ஓர் துளி



ஓர் துளி..........

ஓராயிரம் துளிகள்...........

ஓவென பொழிகின்றது மழை

(இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக
மரங்கொத்தி இதழ் -03 இல் வெளிவந்த கவி)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணோரத்தே கண்ணீர் துளிகள்

கானகந்தனில் அசைந்தாடும்
மூங்கிலை
முறித்து
புல்லாங்குழல் படைத்தான்
பயனில்லையென
பதுங்கிய
செம்மண்ணில்
பானைதனை படைத்தான்



அசையா
கற்பாறையை
செதுக்கி
ஓவியமதைப் படைத்தான்
படைப்புகள் பெருகின
யுத்தமற்ற தேசமொன்றை
படைக்கமுடியவில்லை
பூமிதனில்
எண்ணுகையில் எரிகின்றது இதயமது
கண்ணோரத்தே கண்ணீர் துளியுடன்

நிகழ்ந்தனவற்றை
நினைவதுமில்லை
இதுவே உலக நியதி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணத்தில் கலைந்திட்ட இன்பங்கள்

கனவுகள்
மனதில் சிறகடித்து
இன்பவானில் பறந்திட
இலட்சிய பாதைதனில்
மலர்கள் தூவி
பயணிக்கும் தருணத்தில்
இயற்கை அன்னை பயண
திசையை
திருப்பிவிட்டாள்
கணப்பொழுதினில்

மேகம் கறுத்து
மழை பொழிய
ஆறுகள் பெருக்கெடுத்து
அழிந்தது ஊரே
மனைகளை இழந்து
தஞ்சம் புகுந்தார்கள் - வெள்ளம்
தடம்பதிக்காத இடந்தனில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமது
இலட்சியமது
சொத்தது என எண்ணிலடங்காதனைத்தையும்
வெள்ளம் அழைத்து
கடலில் கலத்தன
கணப்பொழுதினில்

நினைவது நிகழ்வதில்லை
நிகழ்தனவற்றை
நினைவதுமில்லை
இதுவே உலக நியதி.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணகி

தென்றல் காதல் கொண்டு
மேனியை வருடிச்செல்லும்
இதமான ஓர் பொழுதினில்
அழைப்பிதழை அரவணைத்து
ஒன்று கூடியிருக்கும்
கல்வியின் அருவிகளுக்கும்
கன்னியர்களுக்கும்
காளையர்களுக்கும்
இதயம் திறந்த
நல்வந்தனங்கள்
கண்ணகியின் தோழியாய்

யான் பெற்ற இன்பங்களுள்
ஒன்று,
கற்புக்கரசி கண்ணகி
தோழியாய் இருக்கின்றாள்
சில நிமிடங்கள் என்னோடு
அத்தருணம் இதுவாயிருக்கிறது

தமிழ் இலக்கிய வானில்
தாழாது ஒளிவிடும்
முழுமதி
முகம் காணா பெண்ணவள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதரில்
பேரழகுடையாள்
அடக்கத்தையும்
அடக்கிக்கொண்டாள்
அவளுக்குள்ளே

கணவனேயன்றி பிற
கடவுளை தொழாத
கற்பு மங்கையவள்
சோர்வில்லா
புகழை நாடா
நாணப் பெண்ணவள்

இல்லற கடமைதனை
இறை கடமையாய்
ஆற்றும் அவாவில்
தன் துக்கத்தினை
மறந்திட்ட
குலமகளவள்

என் தோழியுடன்
உறவாட
இதோ உங்களுக்கும்
சில நிமிடங்கள்
இனித்திடுங்கள்
இதமாய்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்மைக்கு முகமூடி
அணிவித்த காலமிது
இன்றைய நிலம்தனை
தொட்டதையிட்டு

நாணுவதா
தலைநிமிர்வதா என்று
நானறியேன்
அன்று என் கோவலனுக்காய்
மதுரையை எரித்தேன்
இன்றோ
எத்தனை கோவலர்களது
மனதை சுட்டெரிக்கின்றார்கள்
காதல் அருமையறியா
கன்னியர்கள் சிலர்

தன் காதலன்
தன்னையே சுற்றிச் சுற்றி
வரவேண்டும் என்றெண்ணி
அவன் தவறும் பட்சத்தில்
மரத்திற்கு மரம்தாவும்
குரங்காய் தாவுகின்றாள்
என்ன உலகமிது

692619





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்புதனை மதித்திடாத
உலகந்தனில்
எத்தனை எத்தனை
துன்பங்கள்
இன்றைய கன்னியர்களுக்கு

வாழ்ந்திட துடிக்கும்
பறவைகளின் சிறகை
பறந்திடமுன் முறித்திடும்
காலமல்லவா இது

உலகறியா பிஞ்சுகளின்
உயிரை குடிக்கும்
உயிர்கொல்லிகள் நடமாடும்
நானிலத்ததில் பாதமிட்டதையிட்டு
நாணுகிறேன்

பெண்மணிகளே
உங்களது ஆபரணங்கள்
தங்க அலங்காரங்கலல்ல
மறவுங்கள் அதனை
மதியுங்கள் கற்புதனை
வாசமில்லா மலருக்கும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பில்லா பெண்ணுக்கும்
மதிப்பில்லை பாரினிலே
நான் என்னவனை
நெருங்க நாணினேன்
அவனோ அவனை நாடிய
மாதவியை நெருங்கிவிட்டான்
அது அவன் தவறல்ல
என் தவறே
நீங்களும் அத்தவறை

நிகழ்த்திடாதீர் என் புஷ்பங்களே
மாற்றுப் பெண்களை
நுகர்ந்திடும் ஆடவர்களே
உமக்கும் ஓர் செய்தி
சந்தோஷங்களைப் பற்றி
யோசியாது
சமூக நலன்களையும் சற்று
சிந்தித்திடுவீர்

அன்று
கிணற்றுத் தவளையாய் இருந்த
பெண்மணிகள்
விண்ணில் உலாவும்
காலம் இதுவாயினும்
பெண்ணவளின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பு காற்றில் மிதக்கின்றன இன்று
ஒரு நிமிட ஆசைகளுக்காய்
அருகில் வரும்
ஆடவர்களைக் கண்டால்
சுட்டெரியுங்கள் கன்னியர்களே

இதழ்களை உதிர்ந்திடும்
ரோசாக்கள் அல்ல கன்னியர்
என்பதை நிலைத்திடுங்கள்

கன்னியரே
கண்ணகியின் தோழியின் ஓர் செய்தி
கண்ணகியின் கற்பை தவிர
மறவுங்கள் அவள் வாழ்வுதனை
அதுவே உங்கள் கிரீடம்

என் கவியை இதமாய்
செவியில் ஊற்றிய
நெஞ்சங்களுக்கு
இதமாய்
நன்றியுரைத்து
விடை கொடுக்கின்றேன்.



(இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக
தமிழ்ச் சங்கத்தின் கவியரங்கத்தின் போது வாசிக்கப்பட்ட கவிதை)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாரம் ?

அன்று முதல்
மணக்கும் மல்லிகையிலும்
சுட்டெரிக்கும் மல்லிகையிலும்
குதூகளிக்கும் குயிலிலும்
இல்லை மாற்றங்கள்
இன்று வரை

ஆனால்
உண்ணும் உணவதனிலும்
அணியும் ஆடையதனிலும்
பயிலும் படிப்பதனிலும்
வரவேற்றிடும் வரவேற்பதனிலும்
அரவணைக்கும் அன்பதனிலும்
மதித்திடும் மரியாதைதனிலும்
மாற்றமுண்டாயின மனிதருள்ளே

மாற்றங்கள் அலைமோதிட
பூமிதனில் உறவாடிட்ட
கலாசாரங்கள் ஓடி ஒழிய

கலவரங்கள் கைகோர்த்திட்டன
பூமிதனிலே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திக்கொரு திசையில் பறக்கும் பட்சிகள்

சிதறப்பட்ட வண்ணப் பறவைகள்
சிநேகம் கொள்ள
கூடு சேர்ந்தன ஒலுவில்
மண்ணினிலே
அன்பான அறிவான
அழகிய சிநேகிதங்கள்
எம்மைச்சுற்றி
வட்டமிட்டன

உடல் நடுங்கி நோய்
வந்து வாட்டிட
அன்னையாய் அருகிருந்தாள்
அன்புத் தோழி

அவசரத் தேவைகள்
வந்து வட்டமிட
சகோதரனாய் கரம் கொடுத்தான்
பாசத் தோழன்
குடும்பம் தூரதேசமாய் இருக்க
எல்லா கணங்களும்
குடும்பத்தோராய் எம்மைச் சுற்றி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டமிட்டனர்
நண்பர்குழாம்
விரிவுரையாளர்கள் முன்னே
கண்ணாமூச்சி விளையாடிட
வல்லவர்கள் தோழர்கள்
தோழன் தோழிகளின்
உதவிகளுக்காய்

இந்நன்றிகடன்கள் தீர்ந்திடாது
எவ்வுலகத்தும்

இதயம் வென்ற
ஆழ்மனத் தோழ தோழிகள்
இவ்வளாகம் விட்டு

விரைந்திட்ட
கணங்களை நினைக்கையில்
நெஞ்சம் வெடிக்கிறது
திக்கொரு திசையிலிருந்து வந்து,
சேர்ந்து கட்டிய கூடு கலைந்து
திக்கொரு திசையில்
பறக்கும் பறவைகள்
வெற்றிகள் நிறைந்ததாய்
வெற்றியுடன் வாழ்ந்திட
தோழி பிரியாவின்
இனிய வாழ்த்து
உரித்தாகட்டும்.

(இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கவிப்பலகைக்
தெரிவுசெய்யப்பட்ட கவி)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திசையறியா இதயங்கள்

ஆசைகளை உள்ளத்தினுள்
அடக்கி மன
இருளை விலக்கி
ஈசன் அருளை வேண்டி
உணர்ச்சிகளை கைதுசெய்து
ஊரார் வார்த்தைகளை கேளாது
எண்ணத்தில் திடம் பூண்டு
ஏக்கங்கள் கலந்து
ஒதுங்கி விலகாது
ஓர் இலட்சியத்திற்காய்
துடிக்கும் இதயங்கள்
நிலைத்தடுமாறி தவிக்கும் பரிதாபம்

இயற்கை சீற்றத்தால்
மழையில் நனைந்து
வெள்ளத்தில் மூழ்கி
மண்சரிவில் சரிந்து
சூறாவளியில் சுழன்று
புயலில் சிக்கி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிமலையில் எரிந்து
பனியில் உருகி
மன எண்ணங்கள் சிதைந்து
சிக்கி தவிக்கின்றனர்

சுதந்திர பட்சிகளாயினும்
வழியறியாது
திசையறியாது
கரைகாண முடியாது
அலைபாய்கின்றன இதயங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைத்தாய் என்வாழ்வை

சுதந்திரச்சிட்டாய்
சிறகு விரித்து பறந்த என்
சிறகை காதலெனும்
கத்தியால் துண்டித்தாய் - உன்னால்
கல்வியை மறந்தேன்
உறவின் பாசத்தைத் துறந்தேன்
உணவை வெறுத்தேன்
பணத்தை வீணடித்தேன்
மானத்தை பறிகொடுத்தேன்
தூக்கத்தைத் தொலைத்தேன்
மொத்தத்தில் காதல் எனும்
இன்பத்தால் - என் வாழ்நாள்
இன்பங்களை இழந்தேன்
இறுதியில் -நீ
இன்னொருவருடன்
இணைந்து
தொலைத்தாய் என் வாழ்வையே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமம் அகதிகளா?

காத்திட வேண்டிய ஜனனங்களை
காத்திடாது
யுத்தமெனும் தீரா மனநோயால்
வேதனைதனில் வாடிற்று
உயிர்பிச்சைக் கேட்டு
தஞ்சம் புகும்
மானிட நாமம் அகதிகளா?

அகதியாய் பட்டம் சூட்டி
எட்டி வைக்கின்றான்
ஓர் முடுக்கிலே
விடியாத ஓர் விடியலாய்
சொந்தங்கள்
சொத்துக்கள்
சந்தோஷங்கள்
தொலைத்த ஜனனங்களுக்கு
இன்னுமொரு வேதனைக் கடல்
அகதியெனும் நாமமது

யார் சூட்டிய நாமமிது
அழியாதோ
ஓர் விடியலில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீயும் நட்டிடு முற்றமதில்

விதையாய் புதையுண்டு
விருட்சமாகி
உடலை தானமளிக்கிறாய்

கட்டில்தனை தாயின் மடியாயும்
பெட்டிதனை வாழ்வின் முடிவாயும்
வாழ்வின் துணையாய்
உணவாயும்
உறைவிடமாயும் நின்றவன்
உணர்வில்லா நண்பனவன்

நிழல் தந்து
நிமிர்ந்தவனை
சிதைத்து
சிலை வடிக்கின்றான்
சிக்கனமாய்

மானிட ஜனனம் பெறா
மகிமைக்கொண்ட
மாவிருட்சத்தை
மகிழ்வாய் நட்டிடு முற்றமதில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம்


வந்தவுடன்
சென்றிடும்
அற்புதம்

உள்ள இடத்திலே
புகுந்திடும்
புதுமை

ஏழை கை
சேரா
அதிசயம்

பிணமும்
வாய்திறந்திடும்
நகைப்பு

ஒவ்வொருவரும்
சேர்க்கும்
பொக்கிஷம்.



மொத்தத்தில்
இன்பத்தையும்
துன்பத்தையும்
வரவேற்றிடும்
உறவு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக்கூடம்

பிறந்த ஆறுவருடங்களில்
பிரியா தாயை
பிரியும் முதல்
பிரிவுடன்
பிறக்கின்றது பாடசாலை வாழ்வு
தன்னை ஒத்த பலருடன்
தான் இணைய
தாயைக் காணவில்லை
தாயாய் ஆசான்
தனக்கு முன்னால்

சகோதரனாய்த் தோழனும்
சகோதரியாய்த் தோழியும்
சந்தோஷங்கள் பலவுடன்
சந்தித்தோம் பாடசாலையில்

பிழையறியா
பிஞ்சு வயதினில்
பிறந்திட்ட குறும்புகளால்
பிரம்புப் பசிக்கு தீனானோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சையென்றாலே
பயம் வினாத்தாளில்
பதிலளிப்பதற்கு ஆனால்
பரிசு பெற்ற நாட்களும் பல

புத்தகங்களை
புத்தியைதீட்டவென
புறத்தில் ஏந்தினோம்

மறதிக்காய்
மணற்தரையில்
மணிக்கணக்காய்
மண்டியிட்ட நாட்கள்
மறவா நாட்களே

சின்னச் சிறு சண்டைகள்
சின்னஞ் சிறு தோல்விகள்
சிந்தனையில்லா சினங்கள்
சினேகித பிரிவுகளெல்லாம்
சிக்கியுள்ளன
சிந்தனையுள்ளே






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாய் உண்ட உணவுகள்
ஒன்றாய்ச் சென்ற பயணங்கள்
ஒன்றாய் வாங்கிய அடிகள்
ஒன்றா இரண்டா மனதில்

துன்பங்களின்றி
பொறுப்புக்களின்றி
பொறுமையின்றி
சுதந்திரச் சிட்டுக்களாய்
சுற்றித்திரிந்தோம் அன்று




சுமைகள் சூழ
சூழல் மாற்றமுற
பொறுப்புக்கள் பெருக
பொழுதுபோக்குகள் குறைய
பாடசாலை வாழ்க்கை வட்டம்
பறக்கின்றது மனதுக்குள்ளே

நினைவலைகள் பலவிதம் -ஆனால்
நிலைத்தவைகள் சில - அவை
நீடித்திடும் ஆயுளோடு
பாடசாலை வாழ்வு வட்டமாய்.

(இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக மரங்கொத்தி
இதழ் -03 இல் வெளிவந்த கவி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிதாபம்

பத்து வருட தென்றலிலே
பறக்கிறது ஓர் ஆசை
பரிசு
பற்றிக்கொள்ள மனமுண்டு
பதம்பார்க்க
பணமில்லை சேமிப்பிலே

பாசம் கொள்ள உறவில்லை
பாவம் பார்க்க நாதியில்லை
பாவம் அவன் ஏங்குகிறான்
பாதம் தொடும் ஓரணிக்காய்
பாவம் பாரா
பாரல்லவா இது

பிஞ்சு கரங்கள்
பிச்சையேந்தி
பிறரறியா ஓரிடத்தில்
பிச்சையிட்டு சேமிக்கின்றான்
பிச்சையினை
பீதியில்லா பையனவன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னகை மலர்ந்து சோகமில்லாது
பெற்றுக்கொண்ட சேமிப்பினால்
பேரின்பம் கொண்ட
பையனவன் தன்னாசை
பொக்கிஷத்தைப் பெற்று
போகிறான் ஓர் கன்னி
பயணம்

பாராது
பின்தொடர்ந்த
பீதியில்லா வண்டியவன்
புழுதிபறக்க மலர்ந்த மலரை
பெயர்த்தெடுத்தான்
பேரின்பப் பொழுதினிலே
பையனவன் வண்டியினை
பொருத்திட முடியாதிட
போர் சடலமாயானான்
கணத்திலே



(இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக "அதிர்வு"
சஞ்சிகையில் வெளிவந்த கவிவரிகள்-2013)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிச்சைக்காரன்

பிறப்பெடுக்கும்
பிறப்பனைத்தும் இவ்வுலகின்
பிச்சைக்காரர்களே

பொருளில்லான்
பொருட்களுக்காய் பிச்சையேந்துகிறாய்
எதையுமே ஏந்தாதுதித்த
என் உயிருக்காய்
என் உடலுக்காய்
என் வாழ்வுக்காய் என
இவ்வுலக பொருட்களை
இறுக்கிக் கொண்டு
இதற்கிடையில்
சண்டை சமாதானம்
சமரச சவால்
சாதனைகள் என
இவற்றுக்குள்ளே
சக்கரம் போல் சுழன்று
சூரியன் காலைதனில் மலர்ந்து
பகல்தனில் பிரகாசித்து
மாலைதனில் மறைவதாய்
மானிடவுயிர்
பிறந்து
பிச்சையேந்தி
பிரிகின்றது







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவின் தவிப்பு

நினைவுகள் அலைமோதிட
நிலைதடுமாறுகிறது
நிலைமாறாத அன்பினால்

அன்று
ஏன் சந்தித்தோம்
ஏன் நண்பராகினோம்
ஏன் மனம் திறந்து விளையாடினோம்
ஏன் சேர்ந்து ஊரைச்சுற்றினோம்
ஏன் தோழர்களாய் உலாவந்தோம்
அன்பே
இன்று பிரிந்து
தவிப்பதற்கா
பிரிந்தது என்தவறல்ல என
நான் நினைத்துக்கொண்டும்
பிரிவுக்கு காரணம் நானல்ல என
அவள் நினைத்துக்கொண்டும்
இருவரும் தவறுசெய்துக் கொண்டிருக்கிறோம்

நம் அன்பு அழிய
நாம் காதலர்கள் அல்ல
நிலைத்திருக்கும் நண்பர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுமை

உலகம் போற்றும்
உன்னத
உலக வள்ளல்
உயர்கீர்த்திகளைக் கூற
உதடுகள் துடிக்கின்றன
உதிரம் கொதிக்கின்றது
உயரோன் புகழ்கூற -இவ்
உலகில் வார்த்தைகளே இல்லை

நன்மைகள்
நடத்திட உதித்த
திருநபியே உன்
திருநாமம் கூறி
தினமும் உன்புகழ் கூறிட
திருகி உருகி நிற்கின்றேன்

அறம் அன்பு
எளிமை ஒழுக்கம்
ஞானம் பொறுமை
நம்பிக்கை உண்மையென





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருபையெல்லாம் ஒன்றுசேர
உருவான திருவடிவமே
கீர்த்திசேர் வள்ளல்

மனவுறுதியும் வீரமும்
துளிர்விடும்
பொறுமையை
பொன்னான வாழ்வில்
பொன்னாடையாய்
போர்த்தியிருந்தோனா எம்
வாய்மை முஹம்மது

திருமேனி மாசுபட
தினம் தினம்
குப்பைக்கொட்டினாள்
ஓர் மூதாட்டி
பொறுமையின் வள்ளல்
முகம் சுழிக்காது
மூதாட்டியை வதைக்காது
தினம் தினம் - அதே
வழியிலே
தன் பாதமலரை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரை வைத்தார்
சூரியன் கண் விழித்தன்று
காணவில்லை மூதாட்டியை
சுகயீனமாய்
கட்டிலில்
கண்ணயர்ந்திருந்தாள்

பொறுத்தல் நன்று
அதனை மறத்தல்
அதனிலும் நன்று
மூதாட்டிக்காய்
புனித திருவாயால்
துவா கேட்டார் திருநபி
பொறுமையின் திலகமாய்

பொறுமையால்
வென்றெடுத்தார்
உலகையே எம்
கீர்த்திச்சேர் வள்ளல்

(உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு
2011இன் படைப்பின் ஒரு பகுதி)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலை

ஊற்றெடுக்கும் நீர்த்துளியை
உலகறிய நீர்வீழ்ச்சி
ஆக்கிவிட்டாய்
உன்மேனியை அர்ப்பணித்து

புல்பூண்டு இலை குழை
செடி கொடி மான் மரை
சிங்கம் சிறுத்தை என
எண்ணிலடங்கா
தோழர்களுடன்
அலங்கரித்துள்ளாய் உன்னையே

கண்கவர் கன்னியோ நீ
இரசிக்க வைக்கிறாய்
குவிந்துள்ளாய் குன்றாய்
குளிர்மையும் உன்வசமே
உயர்ந்து சென்று வானை எட்ட
நினைக்கின்றாயோ?

உன்னை இரசிக்க
உலாவருகின்றார்கள் கோடிமக்கள்
அதனைக் கண்டு ஆனந்தத்தில்
ஆடி அசைந்து விடாதே
அழிந்திடும் ஊரே.

(தினகரன் 2010.12.05)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மகுடம்

மண் தரையில்
படர்ந்த
பாயில்
படுத்துறங்கும்
பாவியான
பெண்ணவள்

போர்வையை
ஒதுக்கிவிட்டு
மேனி தாங்கா
குளிரில்
சேவல் கூவும் ஓசையில்
விழித்திட்டாள்
காலை
கடன்களை
முடித்திட
முடியவில்லை
தண்ணீர் தூரத்தே,
தாழிடா மலசலகூடம்
அடியெடுத்து வைக்கமுடியா
அருவருக்கத்தக்கது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிளார் இட்டு
அடுப்பு மூட்டி
சக்கரை இல்லாது
சாயம் குடித்து விட்டு
இரவு உண்ட
சோற்று மீதியை
பசங்களுக்கு
பகிர்ந்தளித்துவிட்டு
பட்டினியாய்
முதுகில் கூடை சுமந்து
முகில் மூடியதையும் பாராது
மலையேறுகிறாள்
மலைமகள்

பாதணியைக் கால் அறியாது
பனித்துளி
காலில் பட்டு மறைந்திட
கால்கள் விறைத்திட்டு
முட்கள் குத்தி
அட்டைகள் கடித்து
இரத்தத்தோடு
ஆயுளையும்
உறிஞ்சுகின்றன





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமை பாராது
வெயில் பாராது
மழை பாராது
கொழுந்து பறிக்க
ஊழல்மிகு
வஞ்சகக் கங்காணிகள்
வஞ்சிக்கின்றனர் நிறையினிலே
சம்பள நாளில்
சம்பளத்தை விட
கடன் அதிகம்
கடைதனிலேயும்
வஞ்சக நிலையே

எத்தனை துன்பங்கள்
அத்தனையும் வஞ்சகங்களுடனே
இவள் பாடுபட
அரசாங்கம் துயர்காணாது
இலாபமீட்டுகின்றன

மலையக மகுடங்களை
மனமில்லாது விமர்சிக்க
வாய்களுண்டு ஆனால்
மலையக மகுடங்களின்
வேதனைதனை அறிய
நாதியில்லை
நாட்டினிலே

(இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக
மரங்கொத்தி இதழ் -04இல் வெளிவந்த கவி)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை

உடல் வறண்டு
நிலம் வெடித்து
பயிர்கள் செழிப்பிழந்து
நீர்நிலைகள் இருப்பிடமறியாது
துயர் வாட்டிட

உன்னை
வரமாய்
வரவழைத்திட
ஏன் உனக்கிந்த சினம்
உன்னைக் கண்ட கணம்
இழந்திடச் செய்தாய்
இன்பமதை

மலையகம் மண்சரிவிலும்
கரையோரம் வெள்ளத்திலும்
அலைமோதிட
நீ களிப்பில் மூழ்கினாய்
காற்றுடன் கலந்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ

நிலமதை முத்தமிடு

நிலத்தினை

மூழ்கிட எண்ணிடாதே

துளியேனும்

வாழ்வோரை

வாழவிடு

வாழ்ந்திட

வாழ்த்திடு உன் மொழியால்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறந்திடேன்

பாசத்தால்
கண்களை மறைத்திட்டு
லீலைகளால்
துன்பங்களைக் களைத்திட்டு
வார்த்தைகளால்
உள்ளமதைப் பறித்திட்டு
என்னுள் ஓருயிராய்
உருவெடுத்து
நட்பில் ஆட்சி கொண்ட
உனக்கு ஏன் எதிரியெனும்
தீ நாமம்

இதய இரத்தம்
ஊற்றெடுத்த நினைவுகள்
நிலைத்திருப்பினும்
மறந்திடேன்
நட்பெனும் மொழியை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயமான மலேசிய விமானம்

பல்கோடி எண்ணங்களுடன்
பாசப்பறவைகளின் கண்ணீர்களுடன்
பிரிவு எனும் துன்பக்கடலுடன்
பீதிகள் கலந்தபடி
புரியாத உணர்வுகளுடன்
பூரிப்புகளுடன்
பெயரறியா மக்களுடன்
பேரின்பங்களுடன்
குடும்பங்களுக்கு கைகாட்டி
சென்ற உறவுகள்
எங்கே மாயமானார்கள்!

இறுதியாக கண்ட உருவம் மட்டுமே
இறுதிவரை நினைவில் குடிகொள்ள
இறுதி பயணமாகியதே

உறவறியா உருவறியா - எம்
உள்ளம் வேதனையில் நடமாட
உறவுகளின் வாழ்வு எப்படியிருக்கும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள்தோறும் முன்னேற்றம்
நாகரிகம் எனும் நாமத்துடனே
நா தடுமாறும் வீரவார்த்தைகள் – ஆயினும்
நாசமானது பல்லுயிர்களுடன் விமானம்

கண்டுபிடிப்புகள் பலவாயினும் – இன்னும்
கண்டுபிடிக்கவில்லை விமானத்தை – ஏன் இந்த
கண்டுபிடிப்புக்கள் பயனற்றதாய்
கண்ணீர் மட்டுமே இன்னும் விழியோரத்தே

யார் செய்த வினையோ
யாவரும் துயர் கொண்ட பரிதாபம்
இனியோர் மாயத்துயர் வேண்டாம்
இறைவா உன் பாதத்தில் வீழ்ந்து வேண்டுகிறோம்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறா நினைவலைகள்

உன் இதழோர புன்னகை
உலகையே
உலுக்கும் முத்தங்கள்

உள்ளத்தைக் கொன்றீர்த்த
உதட்டு மொழிகள்

உடல் ஆரா தழுவல்கள்-யாவும்
உன்னோடு நானிருந்த
உன்னத பொழுதுகளை
உன்னை பிரிந்த தருணங்களில்
உணரச்செய்கிறாய் மாதா
மாறா நினைவலைகளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் பாதையறியாது

இன்பங்கள்
ஊழல்கள்
குமுறல்கள்
சஞ்சலங்கன்
சதித்திட்டங்கள்
சண்டைகள்
சாகசங்கள்
துன்பங்கள்
வேதனைகள் நிறைந்த
உலகதனில்
மரணங்கள் மீளாதென்றும்

இனிமையாய்
இன்பங்களை படம்பிடித்து
தடையதனை தாண்டி
தூக்கத்தினை  தியாகித்து
கஷ்டமதையேற்று
சேவைதனை மேற்கொள்
நிச்சயமொரு நாள் உனதாகும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்
பொன்னான
பொழுததனை
தூக்கத்திற்காக தொலைத்து
தோல்விதனை மாலையிட்டால்
வாழ்க்கை முழுதும்
துன்பச்சுடர் சுட்டெரிக்கும்

மறைந்தந்த பகலவன்
மறுபொழுதினை
மலரச்செய்யும்
- எதிரேற்றமில்லையாங்கு
அதுவாய்
மனிதவாழ்வின்
மணித்துளியனைத்தும்
மீண்டும் திரும்பிடாது
என்றென்றும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வாழவிடு

சிரித்தாய்- அதில் மயங்கி
நானும் சிரித்தேன்
நெருங்கினாய் -அன்பில் இச்சைகொண்டு
நானும் நெருங்கினேன்.
அழுதாய் - நெஞ்சம் பொறுக்காது
நானும் அழுதேன்
பிச்சைக் கேட்டாய் என் இதயத்தையே
நானும் பிச்சை தந்தேன்.

ஆனால்
இன்று நீ
இன்னொருவருடன்
இணைந்துவிட்டாய்
இதனால்- என்
இதயத்தை எறியமுன்
உன்னிடம் ஒன்றே ஒன்று
கேட்கின்றேன்
மறுக்காமல் திருப்பித்தந்து
மீண்டும் வாழ விடு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரைந்திடும் நேரமுள்

பொன்னான
பொழுதுகளை
பொக்கிஷமாக்குவது
இலகு ஆனால்
இப்படிப்பட்டோரை
இவ்வுலகில் காண்பதரிது

கொட்டிய நீரையோ
கொட்டிய வார்த்தைகளையோ
திரும்பிடாது
இப்படியாகவே
சென்றநேரத்தையும்
வரவழைக்க முடியாது

இறைவன் அளித்த
ஆயுளின்
ஒவ்வொரு இமைப் பொழுதுகளையும்
தொ(ல்)லைக் காட்சிக்காகவோ
தொல்லை பேசிக்காகவோ
வீண்விரயம் செய்யாது
பிறந்த பிறப்பின்
சாதனைகளுக்கு
அர்ப்பணித்து வாழ்வில்
சுபீட்சம் பெற்றிடு
மானிடா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுப் பொருளாய் விதி

பழுத்த முடியில்
பம்பரம் போன்ற ஓர் கொண்டை
நடுங்கிடும் உடல்
நடந்திட ஓர்தடி
உடல் சுருக்கங்கள் மறைய
உறுதியில்லா ஓர் சேலை
தோல்விகள் நிறைந்த
தோள் ஓர் பையை
சுமந்தப்படி
நடைப்பாதை அறியாது
நடக்கின்றாள் ஓர் கிழவி

முத்தாக பெற்ற
முத்துக்கள் மூன்று
வித்தான இந்த
சொத்துக்களை
கணவன்
கண்காணா உலகம் சென்றும்
கண்ணீர் பெருக
கஷ்டங்களை தாங்கி
விழுதாக்கி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருட்சமாக்கி பெரும்
தோப்பாகவே மாற்றிவிட்டான்-ஆனாலும்
தோள்கொடுக்க
ஒரு ஜீவனும் இல்லாது  வீதி
ஓரத்தே குடிகொண்டுள்ளாள்
ஓரவஞ்சம் அறியாக் கிழவி

உலகம்
உருண்டு விளையாட இவளது
விதியையும் ஓர்
விளையாட்டுப் பொருளாக்கி
விளையாடுகிறான்
வீதியோரத்தே.



(தினகரன் 2011.06.05)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு :





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Add:-
NO-149,
Padinawela,
Boragas.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
692619

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிறப்பின்

அர்த்தமாய்

பிறப்பின்

சாட்சியாய்

பிறப்பின்

முயற்சியாய்

பிறப்பின்

வாழ்வாய்

பிறப்பெடுத்துள்ளது

சங்கீர்த்தனம்

692619

ISBN 978-955-42795-0-6

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org